அனுப்புநர்

முனைவர். ச.கண்ணப்பன்

இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்ககம்

பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்

சென்னை -06

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டங்கள்

ந.க.எண் : 062956 /எம்2/இ3/2024 நாள் 25.07.2025

பொருள்: பள்ளிக்கல்வி இயக்ககம் – ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை – மாணவர்களின் விவரங்களை சரிபார்த்தல் உரிய பணிகளை முடித்திட நடவடிக்கை – நிலுவையில் உள்ள பட்டியல் – அனுப்புதல் சார்பு

பார்வை:

1. சென்னை-09, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளரின் கடித எண் 977/ADW3-2025-நாள்.26.03.2025
2. தமிழ்நாடு பள்ளிக்கல்விஇயக்குநரின் கடிதம் ந.க.எண் : 062956 /எம்2/இ3/2024 நாள்.01.04.2025

பார்வை 01 இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களின் வங்கி கணக்கு விவரங்களை சரிபார்த்திட தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது . மேலும் 08 , 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் விவரங்களை Student Profile update சரியாக உள்ளதை அந்தந்த வகுப்பாசிரியர்கள் உறுதி செய்திட அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் இவ்வலுவலகத்தினால் அனுப்பப்பட்ட ஆணை நகலை உடன் அனுப்பவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் 2025-26 கல்வியாண்டு தொடங்கி நடைபெற்ற இணையவழி கூட்டத்திலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் கூட்டத்திலும் இப்பணியினை முடித்திட அறிவுறுத்தப்பட்டது. இணைக்கப்பட்ட பட்டியலில்உள்ள விவரம் மாணவர்களது வங்கி கணக்கை நடைமுறைக்கு கொண்டுவரவும் (Active) மற்றும் ekyc ஆதார் சரிபார்க்கும் பணியினை முடித்து 30.07.2025 க்குள் தவறாமல் முடித்திட தேவையான நடவக்கைகள் எடுத்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – Excel பட்டியல்

for 25/7/2025

இயக்குநர்